




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி,சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 307 30.04.2026 THURSDAY CHITHIRAI: 17 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 307 30.04.2026 வியாழக்கிழமை சித்திரை : 17 விலை : ரூ.5/–


## உ.பி.யை இழிவுபடுத்தும்

# 'திமுகவுடன் சமாஜ்வாதி கட்சி கைகோர்த்துள்ளது'

## பிரதமர் மோடி விமர்சனம்

ஹார்தோய்: ஏப்.30-

உத்தரப் பிரதேசத்தை இழிவாகப் பேசி அரசியல் செய்யும் திமுகவுடன், சமாஜ்வாதி கட்சி கைகோத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி விமர்சித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் ரூ.36,230 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 594 கிலோ மீட்டர் தொலைவிலான கங்கா ஆறுவழி விரைவுச்சாலை திட்டத்தை அம்மாநிலத்தின் ஹார்தோய் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "மேற்கு வங்கத்தில் தற்போது இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. முதல் கட்டத்தைப் போலவே இரண்டாம் கட்டத்திலும் மக்கள் பெருமளவில் தங்கள் வாக்குகளை செலுத்தி வருகிறார்கள். 60, 70 வருடங்களாக நினைத்துக்கூடப் பார்க்க முடியாத வகையில் அச்சமற்ற ஒரு சூழலில் வங்கத்தில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. எவ்வித அச்சமும் இன்றி மக்கள் வாக்குகளை செலுத்தி வருகின்றனர்.

நேற்றுதான் குஜராத் மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து, வட்டாரப் பஞ்சாயத்து ஆகியவற்றுக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகின.

இதில், 80 முதல் 85% வரையிலான நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. ஐந்து மாநிலங்களில் நடைபெறும் தேர்தல்களில் பாஜக ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்யப் போகிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். மே 4ம் தேதி வெளியாகும் தேர்தல் முடிவுகள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் நமது உறுதியை மேலும் வலுப்படுத்தும்.

தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள கங்கா விரைவுச் சாலை மீரட்டைத் தாண்டி ஹரித்துவார் வரை நீட்டிக்கப்படும். இதன் பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில், ஃபருக்காபாத் இணைப்பு விரைவுச் சாலை ஒன்று அமைக்கப்படும்.



இது மற்ற விரைவுச்சாலைகளுடன் இணைக்கப்படும். இதுவே இரட்டை இன்ஜின் அரசின் தொலைநோக்குப் பார்வை. இதுவே பாஜக அரசின் செயல் வேகம். இதுவே பாஜக அரசின் பணிமுறை. சில நாட்களுக்கு முன்புதான் டெல்லி டேராடூன் விரைவுச்சாலையை திறந்து வைக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. ஒரு சாலையை அமைக்க பல பத்தாண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்த காலம் இப்போது மலையேறி விட்டது.

முன்பு ஒரு சாலைத்திட்டம் அறிவிக்கப்பட்டால் அது பல ஆண்டுகள் இழுத்தடிக்கப்படும். பல அரசுகள் மாறி மாறி வந்தாலும் அந்த திட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் தென்படாது. ஆனால், இரட்டை இன்ஜின் அரசில் அடிக்கல் நாட்டுவதும் திட்டத்தை திறந்து வைப்பதும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் செவ்வனே நிறைவு செய்யப்படுகின்றன.

அதிகாரத்தை இழந்த சமாஜ்வாதி கட்சி, உத்தரப்பிரதேசத்தின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியடையவில்லை. அவர்கள் உத்தரப் பிரதேசத்தை மீண்டும் பழைய இருண்ட காலத்துக்கே இழுத்துச் செல்ல விரும்புகிறார்கள். அவர்கள் மீண்டும் சமூகத்தை பிளவுபடுத்தி சிதைக்க துடிக்கிறார்கள். சமாஜ்வாதி கட்சிக்கு வளர்ச்சிக்கு; பெண்களுக்கு எதிரானது. சமீபத்தில் சமாஜ்வாதி கட்சி, காங்கிரஸ் கட்சி ஆகியவற்றின் உண்மையான முகத்தை நாடு மீண்டும் ஒருமுறை கண்டது.

மத்தியில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. அந்த மசோதா நிறைவேறி இருந்தால் 2029 ம் ஆண்டு தேர்தலில் இருந்தே மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளில் நமது தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கு 33% இட ஒதுக்கீடு கிடைத்திருக்கும். அவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் சென்றிருப்பார்கள். இத்தனைக்கும், விகிதாச்சாரத்தில் எந்த மாற்றமும் இன்றி இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று நாங்கள் நாடாளுமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருந்தோம்.

ஆனால், உத்தரப் பிரதேசத்தை இழிவாகப் பேசி அரசியல் செய்யும் திமுக போன்ற கட்சிகள், உத்தரப்பிரதேசத்துக்கான இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்போவதாகக் கூறி எதிர்த்தன. நாடாளுமன்றத்தில் அந்த கட்சிகளின் மனநிலையே சமாஜ்வாதி கட்சியின் குரலாகவும் ஒலித்தது. இங்கிருந்து (உத்தரப்பிரதசேத்தில் இருந்து) உங்கள் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றத்துக்குச் செல்லும் சமாஜ்வாதி கட்சி உறுப்பினர்கள், அங்கே உத்தரப் பிரதேச மக்களை இழிவாகப் பேசுபவர்களுடன் கைகோத்து நிற்கிறார்கள். சமாஜ்வாதி கட்சியால் ஒருபோதும் வாரிசு அரசியலையும் சாதிய அரசியலையும் கடந்து மேலே உயரவே முடியாது.

இன்று உலகம் முழுவதும் போர், அமைதியின்மை மற்றும் நிலையற்ற தன்மையால் எவ்வாறு சிக்கித் தவிக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் காண்கிறீர்கள். உலகின் முக்கிய நாடுகளின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. ஆனால் இந்தியா மட்டும் தனது வளர்ச்சிப் பாதையில் அதே வேகத்துடன் முன்னேறிச் செல்கிறது. இந்தியாவின் இந்த வளர்ச்சியை வெளிநாட்டு எதிரிகள் விரும்புவதில்லை. அதேநேரம், அதிகார வெறி கொண்ட உள்நாட்டு சக்திகள் சிலவும் இந்தியாவை வீழ்த்த முயன்று வருகின்றன. இருப்பினும் நாம் பாதுகாப்பாக இருப்பது மட்டுமல்லாமல், வளர்ச்சியில் புதிய சாதனைகளையும் படைத்து வருகிறோம். தற்சார்பு இந்தியா எனும் லட்சியப் பயணத்தை நோக்கி நாம் உறுதியுடன் முன்னேறிச் செல்கிறோம். நாம் மிகவும் நவீன உள்கட்டமைப்பு வசதிகளை கட்டமைத்து வருகிறோம். அந்த திசையில் நாம் எடுத்து வைத்துள்ள மற்றொரு வலுவான அடியே கங்கா விரைவுச்சாலை திட்டம்" என தெரிவித்தார்.



■ எடப்பாடி தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், விவேகானந்தா கல்வி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தின் பாதுகாப்பு அறையில் காவல்துறைப் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சேலம் மாவட்டத் தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான மருத்துவர் அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெற்றதையொட்டி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக் கூட்டரங்கில் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாநகர காவல் ஆனையாளர் திரு.எஸ்.ராஜேந்திரன் இ.கா.ப. அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.யாதவ் கிரிஸ் அசோக் இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.கார்த்திகேயன் மற்றும் அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

## 4வது எஸ்400 கவச வாகனம் இந்தியாவிடம் ஒப்படைப்பு

புதுடெல்லி: ஏப்.30-

இந்தியாவுக்கான 4வது எஸ்400 வான் பாதுகாப்பு கவச வாகனத்தை ரஷ்யா அனுப்பி வைத்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து அதிநவீன எஸ்400 வான் பாதுகாப்பு கவச வாகனம் வாங்க கடந்த 2018ல் மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது. இதன்படி 5 எஸ்400 பாதுகாப்பு கவசங்களை ரஷ்யா வழங்க வேண்டும். இதுவரை 3 எஸ்400 பாதுகாப்பு கவசங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. இவை பாகிஸ்தான், சீன எல்லைப் பகுதிகளில் நிறுத்தப்பட்டு உள்ளன.

இந்நிலையில் 'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கையின் ஓராண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, ரஷ்யாவின் நான்காவது எஸ்400 வான் பாதுகாப்பு கவச வாகனம் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது மே மாத மத்தியில் இந்தியத் துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக `ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது எஸ் 400 கவச வாகனம் மிகச் சிறப்பாக செயல்பட்டது. இதில் உள்ள ஏவுகணைகள் பாகிஸ்தானில் சிந்து நதிக்குக் கிழக்கே உள்ள எந்தவொரு வான்வழி இலக்கையும், 400 கி.மீ. தொலைவிலிருந்து தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை ஆகும்.

இந்தியா வரவிருக்கும் எஸ்400 கவச வாகனத்தை ஆய்வு செய்யும் பணி ஏப்ரல் 18ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து கடந்த வாரம் ரஷ்யாவிலிருந்து கப்பல் மூலம் இது இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பாகிஸ்தானுக்கு எதிரான ஏவுகணைப் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இது ராஜஸ்தான் எல்லையில் நிலைநிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யாவில் இருந்து 5வது எஸ்400 பாதுகாப்பு கவசம், இந்த ஆண்டு நவம்பரில் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் ரஷ்யாவிடம் இருந்து மேலும் 5 எஸ்400 கவச வாகனங்களை கொள்முதல் செய்ய மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரை திருவிழா தேரோட்டம் கோலாகலம்

மதுரை: ஏப்.30-

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரை திருவிழா திருத்தேரோட்டம், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க வெகுவிமரிசையாக தொடங்கியது.

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் சித்திரை திருவிழா ஏப்ரல் 19 ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவை முன்னிட்டு தினமும் காலை, மாலை வேளைகளில் சுவாமி அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தனர்.

விழாவின் பத்தாம் நாளான நேற்று மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விழாவின் 11ம் நாளான இன்று காலை திருத்தேரோட்டம் வெகு விமரிசையாக தொடங்கியது.

திருத்தேரோட்டத்தை முன்னிட்டு மீனாட்சி அம்மனும், பிரியாவிடை சுந்தரேஸ்வரரும் காலை 8 மணி அளவில் கோயிலில் இருந்து புறப்பாடாகி



கீழமாசி வீதியில் தேரடி பகுதியில் எழுந்தருளினர். அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான பெரிய தேரில் பிரியாவிடை சுந்தரேசுவரர், சிறிய தேரில் மீனாட்சி அம்மனும் எழுந்தருளினர்.

காலை 6.30 மணிக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் 'ஹர ஹர சங்கர மீனாட்சி சுந்தரர்' என்ற பக்தி முழக்கத்தோடு சுவாமி, அம்மன் தேர்களை வடம்பிடித்து இழுக்க தொடங்கினர். சிவ பக்தர்கள் ருத்ராட்சையால் ஆன சிவ லிங்கத்தை தோளில் சுமந்தபடியும், பெண் பக்தர்கள் கயிலாய வாத்தியங்கள், சங்குகளை ஊதியபடியும் திருத்தேரின் முன்பாக சென்றனர்

சுவாமி, அம்மனின் திருத்தேர்களானது மதுரை நகர வீதிகளான கீழமாசி வீதி, தெற்குமாசி வீதி, மேலமாசி வீதி, வடக்குமாசி வீதிகளில் வலம் வருகிறது. இதன் காரணமாக மாசி வீதிகள் முழுவதும் பல்லாயியரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர்.

தேரோட்டத்தை காண மதுரை மற்றும் சுற்று வட்டாரங்களில் இருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்துள்ள நிலையில், மதுரை மாநகர காவல்துறை சார்பில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட காவல்துறையினர் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சீருடை அணியாத காவல்துறையினர் தொடர்ந்து ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்

தேரோட்டம் நடைபெறுவதை முன்னிட்டு மாசி வீதிகள் முழுவதிலும் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டது. மாசி வீதிகளில் உயரமாக செல்லும் மின்வயர்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு வாகனங்கள் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசர ஊர்திகள் பாதுகாப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

## சென்னை கோட்டத்தில் ஓர் ஆண்டில் ஆதரவின்றி தவித்த 556 பேர் மீட்பு: ரயில்வே அதிகாரிகள் தகவல்



சென்னை, ஏப்.30-

சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில்வே வளாகத்தில், கடந்த ஓர் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது ஆதரவின்றி தவித்த 556 பயணிகள் மீட்கப்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: கடந்த நிதியாண்டில் (202526), சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட்பட்ட ரயில் நிலையங்கள், ரயில்வே வளாகத்தில் ஆதரவின்றி தவித்த மற்றும் கைவிடப்பட்ட 227 பெண்கள் உள்பட 556 பயணிகளை ஆர்பிஎஃப் போலீஸார் மீட்டனர்.இதில் சிறுவர்கள், முதியவர்களும் அடங்குவர். சிறுவர், சிறுமியர்களை குழந்தைகள் நல உதவி மையங்களிலும், பெரியவர்களை தொண்டு நிறுவனங்களிலும் ஒப்படைக்கப்பட்டனர்.‘ஆப்ரேஷன் சேவா’ கீழ், சென்னை ரயில்வே கோட்டத்தில் பல்வேறு ரயில்களில் பயணத்தின் போது, உடல் நலம் பாதிக்கப்பட்ட 1,125 பயணிகளுக்கு முதலுதவி அளித்து, போதிய மருத்துவ உதவி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இதுதவிர, ‘ஆப்ரேஷன் மாத்ருசக்தி’ கீழ், ரயில்களில் பயணத்தின் போதோ, ரயில் வளாகத்திலோ பிரசவ வலியால் துடித்த 8 கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான மருத்துவ உதவி அளிக்கப்பட்டுள்ளது.அதேபோல், பயணிகள் தவறவிட்ட ரூ.4.36 கோடி மதிப்பிலான சொத்துக்களை மீட்டு, உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வாக்கு எண்ணும் மையத்தில் ‘ஜனநாயகன்’ திரைப்படம் பார்த்த ஊழியர் கைது



சென்னை, ஏப்.30-

அண்ணா பல்கலைக் கழகத்தில் வாக்கு எண்ணும் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா அறையில் ‘ஜனநாயகன்’ படம் பார்த்த ஒப்பந்த ஊழியர் கைது செய்யப்பட்டார்.


சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தில் சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், வேளச்சேரி, தி.நகர், மைலாப்பூர் ஆகிய 5 சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, 24 மணி நேரமும் போலீஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக தரமணியில் செயல்பட்டு வரும் தனியார் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணியை மேற்கொண்டது. இந்நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியராக உள்ள திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த யுவராஜ் (31) என்பவர் அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ள அறையில் ஒப்பந்த ஊழியராக பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் இவர், பணியில் இருந்த போது தனது லேப்டாப்பில் விஜய் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படத்தை சட்ட விரோதமாக பதிவிறக்கம் செய்து பார்த்ததுடன் அதனை படம் எடுத்து தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இது வைரலானது. இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக சென்னை மாநகராட்சி தகவல் தொழில்நுட்ப அதிகாரி சைலேந்தர் கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து யுவராஜை கைது செய்தனர். ஜனநாயகன் திரைப்படத்தை சட்ட விரோதமாக பதிவிறக்கம் செய்ததோடு அதை வாக்கு எண்ணும் மையத்தில் வைத்தே பார்த்துள்ளார். அதோடு அப்படி பார்த்ததை சமூக வலைதளங்களிலும் வெளியிட்டுள்ளார். முன்னதாக இவர், தேர்தல் ஆணையம் வழங்கிய தற்காலிக அடையாள அட்டையையும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தார். இந்த குற்றச்சாட்டுகளுக்காக யுவராஜை கைது செய்த தாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## எரிபொருள் விலை உயர்வால் செயல்பாடுகளை நிறுத்த வேண்டிய சூழல் மத்திய அரசுக்கு விமான நிறுவனங்கள் அவசர கடிதம்



புதுடெல்லி, ஏப்.30-

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவி வரும் போர்ச் சூழல் காரணமாக, விமான எரிபொருள் விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது. இதனால், இந்திய விமானப் போக்குவரத்துத் துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதுடன், பல நிறுவனங்கள் தங்களது சேவைகளை நிறுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளன.


இது தொடர்பாக ஏர் இந்தியா, இண்டிகோ மற்றும் ஸ்பைஸ் ஜெட் ஆகிய நிறுவனங்களை உள்ளடக்கிய இந்திய விமான நிறுவனங்களின் கூட்டமைப்பு , மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்துக்கு கடந்த 26ம் தேதி அவசரக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்: விமான நிறுவனங்களின் மொத்த இயக்கச் செலவில் சுமார் 40 சதவீதம் எரிபொருளுக்காகவே செலவிடப்படுகிறது. தற்போது நிலவும் சூழலில், எரிபொருள் விலை உயர்வு, விமான நிறுவனங்களுக்கு ஈடுகட்ட முடியாத இழப்பை ஏற்படுத்தும். இது அதிக எண்ணிக்கையிலான விமானச் சேவைகளை ரத்து செய்வதற்கு வழிவகுக்கும்.இப்போதைய இக்கட்டான சூழலில் இருந்து மீண்டு வரவும், சேவைகளைத் தொடர்ந்து தொய்வின்றி வழங்கவும் மத்திய அரசு உடனடியாக நிதி ரீதியிலான ஆதரவை வழங்க வேண்டும். குறிப்பாக, உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சேவைகளுக்கான எரிபொருள் விலையில் உள்ள முரண்பாடுகளைக் களைந்து, சீரான விலைக் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும்.வரி விலக்கு கோரிக்கை: சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி ஆகியவற்றால் விமான நிறுவனங்கள் இரட்டைப் பாதிப்பைச் சந்தித்து வருகின்றன. எனவே, விமான எரிபொருள் மீதான 11 சதவீதக் கலால் வரியைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும். இவ்வாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

## ஆலந்தூர், கண்ணன் காலனியில் லாரி இழுத்து சென்றதில் 4 மின்கம்பங்கள் சேதம்

ஆலந்தூர், ஏப்.30-

சென்னை ஆலந்தூர், கண்ணன் காலனியில் விமானநிலைய ஊழியர்கள் குடியிருப்பு உள்ளது. இங்கு வசிப்பவர்களுக்காக உயர் அழுத்த மின்திறன் கொண்ட மின்பகிர்மான நிலையம் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. இந்நிலையத்தில் பொருத்துவதற்காக நேற்று உயர் அழுத்த மின்மாற்றி இயந்திரத்தை ஏற்றிக்கொண்டு ஒரு கன்டெய்னர் லாரி வந்தது. இந்த லாரி ஆலந்தூர், கண்ணன் காலனி, நோபிள் தெரு வழியாக வந்தபோது, அந்த கன்டெய்னர் லாரியில் இடதுபுறத்தில் இருந்த மின்கம்பத்தில் சிக்கி, மின்கம்பிகளுடன் இழுத்து சென்றது. இதில் அப்பகுதியில் இருந்த மேலும் 3 மின்கம்பங்கள் பலத்த சேதமடைந்தன.



Rail Freight

அடுத்தடுத்து 4 மின்கம்பங்கள் இழுத்து செல்லப்பட்டதில், அனைத்து மின்கம்பிகளும் அறுந்து விழுந்ததில் பலத்த தீப்பொறிகளுடன் மின்கம்பங்கள் உடைந்து சேதமானது. இதனால் அப்பகுதி முழுவதும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதுகுறித்து தகவலறிந்ததும் அப்பகுதி திமுக கவுன்சிலர் சாலமோன், அப்பகுதி மின் பகிர்மான அலுவலக அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து மின்வாரிய செயற்பொறியாளர் சிவகுமார், உதவி பொறியாளர் செந்தில் ஆகியோர் சம்பவ இடத்துக்கு மின்வாரிய ஊழியர்களுடன் விரைந்து வந்தனர்.

சம்பவ இடத்தில் சேதமான 4 மின்கம்பங்களை அகற்றி, புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்கம்பிகளை இணைக்கும் பணிகளில் அப்பகுதி மக்களின் உதவியுடன் ஈடுபட்டனர். கண்ணன் காலனிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் இன்று காலைக்குள் மின் இணைப்பு வழங்கப்படும் என்று மின்வாரிய செயற்பொறியாளர் சிவகுமார் தெரிவித்தார். அதன்படி, இன்று காலை கண்ணன் காலனி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இதற்காக அப்பகுதி மக்கள் மின்வாரிய அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தனர்

## தனது உருவ பொம்மையை எரித்து காயமடைந்த பாஜக எம்எல்ஏவுக்கு அகிலேஷ் யாதவ் நேரில் ஆறுதல்



லக்னோ, ஏப்.30-

தனது உருவபொம்மை எரிப்பு போராட்டத்தில் தீக்காயமடைந்த பாஜக எம்எல்ஏ அனுபமா ஜெய்ஸ்வாலை மருத்துவமனையில் சந்தித்து, நலம் விசாரித்தார் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ். அவரது இந்தச் செயல் இப்போது பேசு பொருளாகி உள்ளது.

கடந்த சனிக்கிழமை உத்தரப் பிரதேச மாநில பஹ்ரைச்சில் மத்திய அரசின் மகளிர் இட ஒதுக்கீடு நடவடிக்கைக்கு ஆதரவாக பாஜக சார்பில் பேரணி நடத்தப்பட்டது. அப்போது எதிர்க்கட்சி தலைவர்களான அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி உள்ளிட்டோரின் உருவ பொம்மையை பாஜக எம்எல்ஏ அனுபமா ஜெய்ஸ்வால் எரிக்க முயன்றார். அதில் எதிர்பாராத விதமாக அனுபமா காயமடைந்தார். முதலில் மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், மேல் சிகிச்சைக்காக லக்னோவில் அனுமதிக்கப்பட்டார்.அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவரது முகத்தில் சுமார் 75 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை அன்று காயமடைந்து சிகிச்சையில் உள்ள அனுபமாவை, அகிலேஷ் யாதவ் சந்தித்து, நலம் விசாரித்தார். அப்போது அனுபமாவின் கணவர் மற்றும் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.“சமூகத்தில் பிளவு எனும் தீப்பிழம்பை நாங்கள் விரும்பவில்லை. அதற்கு மாறாக உள்ள நல்லிணக்கத்தையும் நல்லெண்ணத்தையும் தான் விரும்புகிறோம். நமது நேர்மறையான அரசியல் பாரம்பரியம் இதைத்தான் நமக்கு போதிக்கிறது. அதனால்தான் பாஜக சட்டமன்ற உறுப்பினர் அனுபமா ஜெயஸ்வாலை சந்தித்தேன். அவர் விரைவில் குணமடைய வேண்டும் என ஆறுதல் சொன்னேன். அரசியலுக்கான உரிய இடம் என்பது உண்டு. இருப்பினும் மனித உறவுகளுக்கும் சமமான முக்கியத்துவம் வாய்ந்தவை. நல்லிணக்கம் நிலவ வேண்டும்” என்று அகிலேஷ் யாதவ் இந்த சந்திப்பு குறித்து எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார்.

இதற்கிடையில் உத்தரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத், எம்எல்ஏ அனுபமாவை போனில் தொடர்பு கொண்டு உடல் நலம் விசாரித்துள்ளார். அவருக்கு முறையான சிகிச்சை அளிப்பதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதை அனுபமாவின் கணவர் அசோக் ஜெய்ஸ்வால் உறுதி செய்துள்ளார். உ.பி பேரவை சபாநாயகர் சதீஷ் மஹானா, லக்னோ மேயர் சுஷ்மா, பாஜக மாநிலத் தலைவர் பங்கஜ் சவுத்ரி ஆகியோர் காயமடைந்த அனுபமாவை நேரில் சந்தித்து நலம் விசாரித்துள்ளனர்.

## கோடை வெயிலில் திறந்தவெளியில் செல்லக் கூடாது: மாணவர்களுக்கு பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தல்



சென்னை, ஏப்.30-

கோடை வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள வேண்டுமென மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது.இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் ச.கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்:அனைத்து விதமான பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்களும் இந்த கோடை வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ளவும் உடல்நலனை பாதுகாத்துக் கொள்வதும் அவசியமாகும். அதற்கான சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.அதிக வெயில் உள்ள நேரங்களில் குறிப்பாக மதியம் 12 முதல் 3 மணி வரை திறந்தவெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். தண்ணீர் தேவையான அளவு பருகுவதற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு பாடவேளை தொடக்கத்தின்போதும் மாணவர்கள் நீர் அருந்த வாய்ப்புகள் வழங்க வேண்டும்.ஓஆர்எஸ் மற்றும் வீட்டில் தயார் செய்த எலுமிச்சை சாறு, நீர்மோர், லஸ்ஸி, பழச்சாறுடன் சிறிதளவு உப்பு சேர்த்து பருகலாம். பள்ளியில் தேவையான ஓஆர்எஸ் பாக்கெட்கள் மற்றும் முதலுதவி பெட்டகத்தினை தயார் நிலையில் வைக்கவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இஸ்லாமிய சிறுமிக்கு சட்டப்பூர்வ பாதுகாவலராக இந்து தம்பதியினரை நியமித்து ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு!

மதுரை, ஏப்.30-

இஸ்லாமிய சிறுமிக்கு சட்டப்பூர்வ பாதுகாவலராக இந்து தம்பதியினரை நியமித்து ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. மதுரையைச் சேர்ந்த பாலாஜி என்பவர் தொடர்ந்த வழக்கில் குடும்ப நல நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து ஐகோர்ட் ஆணையிட்டுள்ளது. குழந்தையின் சொந்த தாயார் தத்துக் கொடுக்க முழுமையான சம்மதத்தை வழங்கியுள்ளார். அரசியலமைப்பு மதச்சார்பற்றது என்பதால் எந்த மதத்தை சேர்ந்தவரையும் பாதுகாவலராக நியமிக்கலாம் என நீதிபதி தெரிவித்துள்ளார்

## காஸ் சிலிண்டர் விநியோக காத்திருப்பு காலம் குறைப்பு: எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் தகவல்



சென்னை, ஏப்.30-

பெரும்பாலான பகுதிகளில் காஸ் சிலிண்டர் விநியோகத்துக்கான காத்திருப்புக் காலம் 5 நாட்களுக்கும் குறைவாக மாற்றப்பட்டுள்ளது.

விநியோக கால அளவை மேலும் குறைக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தமிழகம் மற்றும் புதுச்சேரி எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் வி.சி.அசோகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரி முழுவதும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களான ஐஓசி, பிபிசி, எச்பிசி பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கிடைக்கின்றன.

எந்தவித பதற்றமும் தேவையில்லை.எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முதல் முனையங்கள், கிடங்குகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் வரை முழு விநியோகச் சங்கிலியும் தடையின்றிச் செயல்படுகிறது.மாநிலம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தடையின்றி விநியோகம் உறுதி செய்யப்படுகிறது.

எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் (ஐஓசி, பிபிசி, எச்பிசி) தமிழகம் முழுவதும் உள்நாட்டு எல்பிஜி விநியோகத்தையும் தடையின்றி மேற்கொண்டு வருகின்றன.எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களின் தொடர் முயற்சி, தமிழக அரசின் தீவிரக் கண்காணிப்பு ஆகியவற்றால், பெரும்பாலான பகுதிகளில் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்துக்கான காத்திருப்புக் காலம் 5 நாட்களுக்கும் குறைவாக மாற்றப்பட்டுள்ளது. விநியோகத்துக்கான கால அளவை மேலும் குறைப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எண்ணெய் விற்பனை நிறுவனங்களின் பங்குகளில் ஆட்டோ எல்பிஜி போதுமான இருப்பு உள்ளது.

ஆட்டோ எல்பிஜி தடையின்றி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இதற்காக கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## செங்கை மாவட்ட கிராம ஊராட்சிகளில் பராமரிப்பின்றி காணப்படும் உறிஞ்சிக்குழிகள்



செங்கல்பட்டு, ஏப்.30-

செங்கல்பட்டு மாவட்டத்தில் கிராமப்பகுதிகளில் வெளியேறும் கழிவுநீரை சுத்திகரித்து வெளியேற்றும் உறிஞ்சிக்குழிகள் பராமரிப்பின்றி பாழானதோடு, புதர்மண்டி உள்ளது. சரியாக பராமரிக்காமல் விட்டதால் அவை அமைத்ததன் நோக்கம் சிதைந்து வருகிறது.மாவட்ட ஆட்சியர் இவ்விவகாரத்தில் தலையிட்டு தீர்வு காண கோரிக்கை எழுந்துள்ளது. 202122ம் நிதியாண்டில் அனைத்து கிராமங்களையும் சுகாதாரத்தில் முன்மாதிரியாக மாற்ற 15வது நிதிக்குழுமத்தில் 30 சதவீத நிதி சுகாதாரத்திற்காகவே ஒதுக்கப்பட்டது.இந்நிலையில் தமிழகம் முழுவதும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஊராட்சிகளில் கால்வாய் மூலம் வெளியேறும் கழிவுநீரை சுத்திகரிக்க உறிஞ்சிக்குழி அமைத்து நன்னீராக்க திட்டமிடப்பட்டது. இதன்படி செங்கல்பட்டு மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சிகளில் உறிஞ்சிக்குழிகள் அமைக்கப்பட்டன.பார்ப்பதற்கு கால்நடை குடிநீர் தொட்டிகளைப் போன்று இருக்கும் இவை, ஊரின் எல்லையிலோ அல்லது தெருவின் கடைசி பகுதியிலோ அமைக்கப்பட்டிருக்கும்.இந்த கிடைமட்ட உறிஞ்சிக்குழியில் முதல் அடுக்கில் ஜல்லி கற்கள், 2வது அடுக்கில் கிராவல், மூன்றாவது அடுக்கில் கரி, 4வது அடுக்கில் மணல், மீண்டும் அடுக்கில் அமைத்து போல் ஜல்லி அமைக்க வேண்டும்.இந்த சுத்திகரிப்பு முறையால் முதல் அடுக்கில் நுழையும் கழிவுநீர் மண் துகள்கள் பிரித்தெடுக்கப்படுகிறது. 2வது அடுக்கான கிராவலில் இருந்து வெளியேறும் போது கருமை நிறம் குறைகிறது.3வது அடுக்கான கரியில் இருந்து சுத்திகரிக்கப்படுவதால் நீர் தூய்மை அடைகிறது. இறுதியாக வெளியேறும் போது தெளிந்த நீராகும். இத்திட்டம் செங்கை மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சிகளில் தற்போது செயல்படாமல் முடங்கி கிடக்கிறது. அமைத்த நாள் முதல் இதை பராமரிக்க உள்ளாட்சிகள் கண்டு கொள்ளவே இல்லை. கால்வாய்கள் உறிஞ்சிக்குழியோடு இணையுமிடத்தை வாரம் ஒரு முறை சுத்தம் செயய வேண்டும்.அதையும் செய்யவில்லை. இதனால் அமைக்கப்பட்ட உறிஞ்சிக்குழிகள் செயல்படாமல் புதர்மண்டி கிடக்கின்றன.

இத்திட்டம் மண்வளம், நீர் வளத்தை பாதுகாக்கும் என கூறப்பட்ட நிலையில், தற்போது மக்கள் வரிப்பணத்தை வீணாக்கி, சிதிலமாகி வருகிறது. ஆனால் சீரமைப்பு செய்வதாக சிறிய தொகை செலவு செய்து பெரிய தொகையை செலவு செய்தது போல் கணக்கு காண்பிக்கப்பட்டு வருகிறது. இதில் பெரிய அளவில் ஊழல் நடைபெற்றுள்ளதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

வண்டலூரை சேர்ந்த சமூக ஆர்வலர் குமரன் கூறியது: கிராமங்களில் வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவு நேரடியாக ஏரியில் கலப்பதை தடுப்பதற்காக உறிஞ்சி குழிகள் அமைக்கப்பட்டது. சிறப்பான திட்டம் என்றாலும் ஊராட்சி நிர்வாகங்கள் இதனை சரிவர பராமரிக்கவில்லை.இதனை பராமரிக்க யாருக்கும் பயிற்சி இல்லாததால் இதனை கண்டு கொள்ளவும் இல்லை. ஆனால் ஆண்டுக்கு ஒருமுறை பராமரிப்பதாக கணக்கு மட்டும் காண்பித்து மக்கள் வரிப்பணத்தை வீணாக்குகிறார்கள்.பெரும்பாலான ஊராட்சிகளில் சமுதாய உறிஞ்சி குழி கழிவு நீர் வரும் பாதையை விட உயரத்தில் அமைந்துள்ளதால் கழிவு நீர் உறிஞ்சு குழி வழியாக செல்லாமல் தொட்டிக்கு முன்னதாகவே தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுத்தியுள்ளது.மாவட்ட நிர்வாகம் இதில் தலையிட்டு உறிஞ்சி குழிகளை சீரமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு பணியை துரிதப்படுத்த வேண்டும். இதில் மாவட்ட ஆட்சியர் தலையிட வேண்டும் என வலியுறுத்துகிறோம் என்றார்.

## குத்தம்பாக்கம் பேருந்து முனையம் ஜீன் மாதம் திறப்பு: போக்குவரத்து துறை அதிகாரிகள் தகவல்



சென்னை, ஏப்.30-
குத்தம்பாக்கம் பேருந்து முனையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் ஏற்படும் நெரிசலுக்கு தீர்வாக, கிளாம்பாக்கம் பேருந்து முனையம் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகின்றது.தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் 90 சதவீத அரசுப் பேருந்துகள் தற்போது கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும் நிலையில், ஈசிஆர் வழியாக செல்லும் பேருந்துகள், வேலூர், தருமபுரி போன்ற வட மாவட்டங்கள் மற்றும் பெங்களூருவுக்கு இயக்கப்படும் பேருந்துகள் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது.
இந்நிலையில், கோயம்பேடு மற்றும் பூந்தமல்லி பகுதிகளில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக திருமழிசை அடுத்த குத்தம்பாக்கத்தில் சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது.24.8 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன பேருந்து முனையத்தின் கட்டுமான பணிகள் முடிந்துள்ள நிலையில், மின்சார இணைப்பு மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.இந்த பேருந்து முனையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, போக்குவரத்து துறை அதிகாரிகள் மேலும் கூறியதாவது: இந்த முனையத்தில் இருந்து அரசு விரைவுப் பேருந்துகள், விழுப்புரம் மற்றும் சேலம் கோட்டப் பேருந்துகள், கர்நாடக அரசுப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.
வேலூர், ஓசூர், பெங்களூரு, திருப்பதி மற்றும் திருவனந்தபுரம் போன்ற முக்கிய நகரங்களுக்குச் செல்லும் பயணிகள் இந்த முனையத்தின் மூலம் பெரிதும் பயனடைவார்கள்.தேசிய நெடுஞ்சாலை உடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள இந்த முனையம், அண்டை மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகள் நகருக்குள் நுழையாமல் விரைவாகச் செல்ல வழிவகை செய்கிறது.மேலும், பூந்தமல்லி பைபாஸ் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் இந்த பேருந்து முனையம் உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## மின்மாற்றி கொள்முதல் முறைகேடு விவகாரம்: செந்தில் பாலாஜி தொடர்பான வழக்கு சிபிஐக்கு மாற்றம்



சென்னை, ஏப்.30-
செந்தில் பாலாஜி, மின் துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில், டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதலில் அரசுக்கு ரூ.397 கோடி இழப்பு ஏற்படுத்தியது தொடர்பான புகார்கள் மீது சிபிஐ விசாரணை நடத்த சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை இரண்டு வாரங்களில் சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என, லஞ்ச ஒழிப்புத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். கடந்த 2021 முதல் 2023 ஆம் வரையிலான காலகட்டத்தில், செந்தில் பாலாஜி, மின் துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில், 45 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் செய்ததில் 397 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி அறப்போர் இயக்கத்தின் சார்பிலும், சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இ.சரவணன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் சார்பிலும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.
இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் முறைகேடு புகார்கள் மீது சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.இந்த விவகாரம் தொடர்பாக புதிதாக விசாரணை நடத்த சிபிஐக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பான ஆவணங்களை இரண்டு வாரங்களில் சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என, லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டனர்.
ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் சிபிஐ, விரைந்து விசாரணையை நடத்தி முடித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிபிஐ விசாரணைக்கு, டான்ஜெட்கோ, லஞ்ச ஒழிப்புத் துறை, தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், வழக்கை சுதந்திரமான விசாரணை அமைப்புக்கு மாற்ற வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்கு தானே தவிர, குற்றச்சாட்டுக்களின் தகுதி குறித்த முடிவாக கருதமுடியாது எனவும், இந்த கருத்துக்கள் யாருக்கும் எதிரானவையாக கருத முடியாது என்றும் நீதிபதிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலில் மீண்டும் வடகலைதென்கலை பிரிவினர் இடையே மோதல்

### இந்த பிரச்னைக்கு முடிவே இல்லையா? பக்தர்கள் கேள்வி



காஞ்சிபுரம், ஏப்.30-
காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலில் மீண்டும் வடகலை தென்கலை பிரவினர் இடையே மோதல் தலைதூக்கியுள்ளது. இந்த பிரச்னைக்கு முடிவே இல்லையா? என பக்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிலில் திருஅவதார உற்சவம் எனும் பெருமாளின் பிறந்தநாள் விழா உற்சவம் இன்று நடைபெற்று வருகிறது. இதை முன்னிட்டு பெருமாளுக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனை நடந்தது. பின்னர், சிறப்பு அலங்காரத்தில் மூலவர் தேவராஜ சுவாமி எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி கொடுத்தார். பெருமாளின் கருவறை மண்ட பத்தில் அமர்ந்து தாதாச்சாரியார் என்னும் வடகலை பிரிவினர் சோஸ்திர பாடல் பாடுவதை வழக்கமாகவும், உரிமையாகவும் கொண்டுள்ளனர்.
இந்த நிலையில் சோஸ்திர பாடல் பாடுவதில் தங்களுக்கும் உரிமை வழங்கவேண்டும் என தென்கலை அய்யங்கார் பிரிவினர் திடீரென வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். இதனால் வடகலை பிரிவினருக்கும், தென்கலை பிரிவினருக்கும் மோதல் ஏற்பட்டது. இதுகுறித்து தகவலறிந்ததும் காஞ்சிபுரம் தாலுகா போலீசார் கோயில் கருவறை முன்பு குவிக்கப் பட்டனர். இரு பிரிவினரும் ஆக்ரோஷ வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது. பெருமாள் பிறந்த நாளில் பெருமாளின் சோஸ்திர பாடல் பாடுவதில் இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட மோதல், பக்தர்களை முகம் சுளிக்க வைத்தது. இவர்களின் பிரச்னைக்கு முடிவே இல்லையா? என பக்தர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்



## செயற்கை முறையில் மாம்பழங்களை பழுக்க வைத்து விற்றால் கடும் நடவடிக்கை

### அதிகாரிகள் எச்சரிக்கை!

சென்னை, ஏப்.30-
செயற்கை முறையில் மாம்பழங்களை பழுக்க வைத்து விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மாம்பழம் சீசன் மார்ச் இறுதியில் தொடங்கி ஜூலை வரை நீடிக்கும். இந்த ஆண்டு ஏப்ரல் இறுதியில் சீசன் தொடங்கியுள்ள நிலையில், வரத்து குறைவாக இருப்பதால் விலை சற்று அதிகமாக உள்ளது. சந்தைகளில் மாம்பழங்கள் விற்பனை சூடுபிடித்துள்ள நிலையில், கடை உரிமையாளர்களுக்கு உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.Rail Freight
இந்நிலையில், செயற்கை முறையில் மாம்பழங்களை பழுக்க வைத்து விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ரசாயனம் மூலம் மாம்பழங்களை பழுக்க வைத்து விற்பனை செய்தால் ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும். மேலும் ரசாயனம் பயன்படுத்தி செயற்கை முறையில் பழுக்க வைக்கப்படுகிறதா? என ஆய்வு மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ரசாயனம் மூலம் மாம்பழங்களை பழுக்க வைத்து விற்பனை செய்தால் விற்பனை உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் உணவு பாதுகாப்பு துறை எச்சரிக்கை விடுத்துள்ளது

## நாசிக் டிசிஎஸ் விவகாரம்: பாதிக்கப்பட்ட பெண் ஊழியரை மலேசியாவுக்கு கடத்த சதி செய்தது அம்பலம்



நாசிக், ஏப்.30-
நாசிக்கில் உள்ள டிசிஎஸ் நிறுவனத்தில் பணியாற்றிய பெண் ஊழியர்களை மத மாற்றம் செய்ய முயன்ற விவகாரத்தில், பாதிக்கப்பட்ட பெண்ணை மலேசியாவுக்கு கடத்த சதித் திட்டம் தீட்டப்பட்டது தெரியவந்துள்ளது.
மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள டிசிஎஸ் அலுவலகத்தில் பணியாற்றும் பெண்களுக்கு பாலியல் வன்கொடுமை மற்றும் மதம் மாற வற்புறுத்தப்படுவதாக பல்வேறு புகார்கள் எழுந்தன.
இதையடுத்து, காவல் துறை இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரணையை தொடங்கியது. இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் நிடா கான், டிசிஎஸ் நிறுவனத்தில் பணியாற்றிய சக பெண் ஊழியரின் பெயரை 'ஹனியா' என மாற்ற வற்புறுத்தியதோடு, அவரை இஸ்லாம் மதத்துக்கு மாறும்படி மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.
மேலும், வேலை வாய்ப்பு என்ற பெயரில் பாதிக்கப்பட்ட பெண்ணை மலேசியாவுக்கு அனுப்பி, அங்கு இம்ரான் என்பவரிடம் ஒப்படைக்க சதித் திட்டம் தீட்டப்பட்டது விசாரணையின்போது தெரியவந்துள்ளது. பாதிக்கப்பட்ட பெண் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், இந்தக் கொலை மிரட்டல் மற்றும் மதமாற்ற முயற்சி வழக்கில் எஸ்சி, எஸ்டி (வன்கொடுமை தடுப்பு) சட்டப் பிரிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.
மதமாற்றம் செய்யும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நீடா கான் புர்கா மற்றும் இஸ்லாமிய மத நூல்களை வழங்கியுள்ளார். அவற்றை போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர். அந்தப் பெண்ணின் செல்போனில் சில மத ரீதியான செயலிகளை நிறுவியதுடன், யூடியூப் மற்றும் இன்ஸ்டாகிராம் வாயிலாகத் தொடர்ந்து மதப் பிரச்சார வீடியோக்களை அனுப்பி நீடா கான் மூளைச்சலவை செய்ய முயன்றதும் விசாரணையில் அம்பலமாகி உள்ளது.இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நீடா கானின் சகோதரர் டேனிஷ் ஷேக் மீது பாலியல் வன்கொடுமை புகார் பதிவாகியுள்ளது. ஏற்கெனவே திருமணமான டேனிஷ் ஷேக், அதை மறைத்துப் பாதிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதாக ஆசை காட்டி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார். உண்மை தெரிந்தவுடன், அந்தப் பெண்ணை மலேசியாவுக்கு அனுப்பி விடுவதாகக் கூறி மிரட்டியுள்ளனர்.
இந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்தவுடன் நீடா கான் தலைமறைவாகிவிட்டார். தான் கர்ப்பமாக இருப்பதாகக் கூறி அவர் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை நீதிமன்றம் கடந்த வாரம் தள்ளுபடி செய்தது. அவரது செல்போனைப் பறிமுதல் செய்து டிஜிட்டல் ஆதாரங்களைச் சேகரிக்க போலீஸார் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.இதுவரை 7 பெண்கள் மற்றும் ஒரு ஆண் என மொத்தம் 8 பேர் புகார் அளித்துள்ளனர். இதன் அடிப்படையில் 8 தனித் தனி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக7 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், நீடா கான் உள்ளிட்ட அனைவரையும் டிசிஎஸ் நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



## மேற்குவங்க மாநிலம் பவானிபூர் தொகுதியில் பாஜக வேட்பாளரை விரட்டியடித்த பொதுமக்கள்

பவானிபூர், ஏப்.30-
மேற்குவங்க மாநிலம் பவானிபூர் தொகுதியில் பாஜக வேட்பாளரை பொதுமக்கள் விரட்டியடித்தனர். மம்தா பானர்ஜி போட்டியிடும் பவானிபூர் தொகுதியில் பாஜக வேட்பாளர், வாக்குச்சாவடிகளுக்குள் சென்றதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பாஜக வேட்பாளரை முற்றுகையிட்டவர்கள் மீது மத்திய பாதுகாப்பு படையினர் தடியடி நடத்தியதால் பதற்றம் நீடிக்கப்பட்டுள்ளது

## சித்ரா பௌர்ணமியை ஒட்டி விழுப்புரத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் அறிவிப்பு

விழுப்புரம், ஏப்.30-



சித்ரா பௌர்ணமியை ஒட்டி விழுப்புரத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை மற்றும் மே 1, 2ம் தேதிகளில் காலை 10.10 மணிக்கு விழுப்புரத்தில் இருந்து புறப்பட்டு 11.45 மணிக்கு திருவண்ணாமலை சென்றடைகிறது என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது

## டிஜிட்டல் கைது முறைகேடு தொடர்புடைய 9,400 வாட்ஸ் அப் கணக்கு முடக்கம்



புதுடெல்லி, ஏப்.30-
நாட்டில் தொடர்ந்து நடைபெறும் டிஜிட்டல் கைது முறைகேடுகள் குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.இந்த வழக்கில் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் தலைமை வழக்கறிஞர் ஆர்.வெங்கடரமணி, உச்சநீதிமன்றத்தில் தற்போதைய நிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.அதில் கூறியிருப்பதாவது: டிஜிட்டல் கைது முறைகேடுகளை தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை தொலைத் தொடர்பு நிறுவனங்களும், இணைய தளங்களும், வங்கிகளும் எடுத்து வருகின்றன. சிம் கார்டுகளை விரைவாக முடக்குவது, வாட்ஸ் அப் பயனாளரை பயோமெட்ரிக் முறையில் சரி பார்ப்பது போன்றவை செயல்படுத்தப்பட்டுள்ளன.டிஜிட்டல் கைது முறைகேட்டில் பயன்படுத்தப்பட்ட 9,400 கணக்குகளை வாட்ஸ் அப் முடக்கியுள்ளது. டிஜிட்டல் கைது முறைகேட்டில் ஈடுபடும் நபர்கள் பெரும்பாலும் தெற்காசிய நாடான கம்போடியாவில் இருந்து செயல்படுகின்றனர். போலி பயனாளர் கணக்குகளைத் தடுக்க, பயனாளர் பெயர்களை காட்டும் முறை கடந்த ஜனவரி முதல் நடைமுறை படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உயிரிழந்த சகோதரியின் கணக்கில் இருந்த ரூ.19,300ஐ தர மறுத்த வங்கி நிர்வாகம்: எலும்புக் கூடுடன் சென்ற சகோதரனால் பரபரப்பு



கியோஞ்கர், ஏப்.30-
ஒடிசா மாநிலத்தில் உயிரிழந்த தனது சகோதரியின் வங்கிச் சேமிப்புக் கணக்கிலிருந்து ரூ.19,300 பணத்தை எடுப்பதற்காக, இறப்பு ஆதாரத்துக்காக அவரின் எலும்புக்கூட்டைத் தோண்டி எடுத்து வங்கிக்குச் சுமந்து வந்த அண்ணனின் செயல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.ஒடிசா மாநிலம் கியோஞ்கர் மாவட்டம் தியானாலி கிராமத்தைச் சேர்ந்தவர் ஜீத்து முண்டா (50). இவரது சகோதரி கக்ரா முண்டா கடந்த ஜனவரி மாதம் உயிரிழந்தார். கக்ராவின் கணவர் மற்றும் ஒரே மகனும் ஏற்கெனவே இறந்துவிட்ட நிலையில், ஜீத்து முண்டா மட்டுமே அவரது ஒரே உறவினராக இருந்துள்ளார்.மலிபோசி பகுதியில் உள்ள ஒடிசா கிராமீன் வங்கிக் கிளையில் கக்ரா முண்டா கணக்கு வைத்திருந்தார். அதில் சுமார் 19,300 ரூபாய் இருப்பு இருந்தது. இந்தப் பணத்தை எடுப்பதற்காக ஜீத்து முண்டா பலமுறை வங்கிக்குச் சென்றுள்ளார். ஆனால், முறையான இறப்புச் சான்றிதழ் அல்லது வாரிசுச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் அதிகாரிகள் பணம் தர மறுத்துள்ளனர். மேலும், கணக்கு வைத்திருப்பவரை நேரில் அழைத்து வாருங்கள் என்று அதிகாரிகள் அலட்சியமாகப் பதிலளித்ததாகக் கூறப்படுகிறது.உடலைத் தோண்டி எடுத்து.. படிக்காத பழங்குடியினரான ஜீத்து முண்டாவுக்குச் சிக்கலான வங்கி நடைமுறைகள் புரியவில்லை. அதிகாரிகளின் பதிலால் விரக்தியடைந்த அவர், திங்கள்கிழமை சுடுகாட்டிற்குச் சென்று புதைத்த தனது தங்கையின் உடலைத் தோண்டி எடுத்துள்ளார். எஞ்சியிருந்த எலும்புக்கூட்டை ஒரு துணியில் சுற்றி தோளில் சுமந்தபடி சுட்டெரிக்கும் வெயிலில் 3 கிலோமீட்டர் தூரம் நடந்து வங்கிக்கு வந்து சேர்ந்தார்.இந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் வங்கியின் மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். வறுமையில் வாடும் ஏழை மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்வதை விட்டுவிட்டு, அதிகாரிகள் ஆவணங்களுக்காக அலைக்கழிப்பதாக அவர்கள் புகார் தெரிவித்தனர்.இதுகுறித்துத் தகவல் அறிந்ததும் போலீஸார் விரைந்து வந்து ஜீத்து முண்டாவைச் சமாதானப்படுத்தினர். பின்னர் அந்த எலும்புக்கூடு மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது. அமைச்சர் கடும் கண்டனம் இதுகுறித்து ஒடிசா மாநில அமைச்சர் சுரேஷ் பூஜாரி கூறுகையில், "வங்கி ஊழியர்களின் இந்த மனிதாபிமானமற்ற அணுகுமுறை கண்டிக்கத்தக்கது. இதற்குப் பொறுப்பானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளேன்" என்றார்.



# பெரம்பலூர் பார் அசோசியேஷன் (கிரிமினல்) சார்பில் முப்பெரும் விழா நீதிபதிகள் பங்கேற்பு

பெரம்பலூர் : ஏப்.30-

பெரம்பலூர் பார் அசோசியேசன் (கிரிமினல்) சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. பெரம்பலூர் பாலக்கரை அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில், பெரம்பலூர் பார் அசோசியேஷன் (கிரிமினல்) சார்பில் 36 ம் ஆண்டு தொடக்க விழா, மகிளா கோர்ட் நீதிபதி பிரிவு உபசார விழா, பெரம்பலூர் பார் அசோசியேஷன் தலைவருக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா நடைப்பெற்றது. பார் அசோசியேஷன் தலைவர் வள்ளுவன் நம்பி தலைமையில் நடைப்பெற்றது. மூத்த வழக்கறிஞர் வாசுதேவன், செயலாளர் சேகர், பொருளாளர் சிவராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக பெரம்பலூர் மாவட்ட முதன்மை நீதிபதி பத்மநாபன், மகிளா கோர்ட் நீதிபதி இந்திராணி, தலைமை குற்றவியல் கோர்ட் நீதிபதி முரளிதர கண்ணன், சார்பு நீதிபதி மோகன பிரியா, சட்ட உதவி ஆணைக்குழு செயலாளர் லதா, மாவட்ட உரிமையியல் கோர்ட் நீதிபதி தான்யா, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி தினேஷ், குற்றவியல் நடுவர் 2 நீதிபதி கவிதா, கூடுதல் மகிளா நீதிபதி ரோஷ்மா, குன்னம் நீதித்துறை நடுவர் மற்றும் உரிமையியல் நீதிபதி ராஜசேகரன், நுகர்வோர் நீதிமன்ற நீதிபதி ஜவஹர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் அரசு வழக்கறிஞர்கள் செந்தில்நாதன், சுந்தரராஜன், புகழேந்தி,சந்தானலட்சுமி, சுரேஷ்குமார், கோவிந்தராஜன், ஜான் கென்னடி, பெரம்பலூர் பார் அசோசியேஷன் (கிரிமினல்) நிர்வாகிகள் ராதா கிருஷ்ணமூர்த்தி, காமராஜ், துரை.பெரியசாமி, குமாரசாமி, பேரா. முருகையன், பால்ராஜ்,, அய்யம் பெருமாள்,, கதிர்.கனகராஜ், ஸ்டாலின், சுபாஷ் சந்திரபோஸ், சின்னப்பா,பன்னீ ர்செல்வம், அண்ணாதுரை, எழிழரசன், திருநாவுக்கரசு, இளமை செல்வன், பாஸ்கர் , அருண், பாடாலூர் முருகபாண்டியன், வடிவேல், அஜித்குமார், கயல்விழி, அன்பு செல்வி, சாருமதி , திவ்யா, நர்மதா, இளம் வழக்கறிஞர் வசுந்தராதேவி, உள்ளிட்ட சங்க வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



■ தென்காசி மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 நடைபெற்று வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரியில் உள்ள பாதுகாப்பு அறையில் பொதுப்பார்வையாளர்கள், அரசியல் கட்சி வேட்பாளர்கள், முகவர்கள் முன்னிலையில் பூட்டி வைத்து சீல் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையத்தினை சுற்றி 3 அடுக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டு, தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப. பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் மற்றும் , காவல்துறையினர், அரசு அலுவலர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.





# சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவிலில் சித்திரை தேரோட்டம்

சங்கரன்கோவில், ஏப். 30-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கர நாராயணசாமி கோவில் தென் தமிழகத்தின் மிகவும் புகழ்பெற்ற சிவஸ்தலங்களில் ஒன்று. இக்கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை திருவிழா சித்திரை மாதம் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 21ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் சுவாமி, அம்பாள் தினமும் பல்வேறு வாகனங்களில் காலை, மாலை இருவேளைகளிலும் வீதி உலா நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் ஒன்பதாம் திருநாளான இன்று காலை நடைபெற்றது. இதனை முன்னிட்டு, அம்பாள் தனித்தனி தேரில் எழுந்தருளும் நிகழ்ச்சி, தொடர்ந்து தேரோட்டம் நடைபெற்றது. தேரோட்டத்தில் கோவில் துணை ஆணையர் சுரேஷ், முன்னாள் அமைச்சர்கள் ராஜலஷ்மி, தங்கவேலு, சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர், சங்கரன்கோவில் எட்டாவது வார்டு நகர மன்ற உறுப்பினர் சரவணன், சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் கௌசல்யா வெங்கடேஷ், திமுக இளைஞர் அணி வீரா, ராயல் கார்த்திக், சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், திமுக தொமுச நிர்வாகி முத்துக்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் மண்டக படிதாரர்கள் செய்து வருகின்றனர்.

# சேலத்தில் ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் கோவிலின் 44ஆம் ஆண்டு திருவிழா

சேலம்.ஏப்.30-

சேலம் பிள்ளையார் நகர்பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ வடபத்ரகாளியம்மன் திருக்கோவிலில் 44ஆம் ஆண்டு திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த திருவிழா ஏப்ரல் 21, 2026 முதல் மே 2, 2026 வரை நடைபெறுகிறது.



திருவிழாவின் ஒரு பகுதியாக (29.04.2026 ஸ்ரீ புதன், சித்திரை 16) அதிகாலை முதலே பக்தர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர். காலை சக்தி கரகம் மற்றும் பால்குடம் ஊர்வலம் நடைபெற்றது. தொடர்ந்து பொங்கல் வைத்தல் நடைபெற்று, அம்மனுக்கு சீர்வரிசை படைத்தல் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. நண்பகல் 12 மணிக்கு மஹா தீபாராதனை நடைபெற்றது. அதன் பின் பகல் 1 மணிக்கு சமபந்தி விருந்து வழங்கப்பட்டது. மாலை மற்றும் இரவு நிகழ்ச்சிகளாக, பூ, அக்கினி கரகம், அலகு குத்துதல் மற்றும் மாவிளக்கு ஊர்வலம் நடைபெற்றது.இந்த திருவிழாவை நிர்வகித்து நடத்தும் நிர்வாக குழு தலைவராக வணங்காமுடி, செயலாளராக வேலு, பொருளாளராக செல்வக்குமார்,துணைச் செயலாளராக ஆனந்தகுமார், ரவிச்சந்திரன், சேகர், ஆறுமுகம், சுரேந்தர்கண்ணா மற்றும் தமிழரசன், செயற்குழு உறுப்பினராக ராஜா ஆகியோர் ஏற்பாடு செய்தனர். இந்த திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசித்து வருகிறார்கள்.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலை திமுக சட்ட மன்ற வேட்பாளர் உடுமலை மு. ஜெயக்குமார் பிறந்தநாள். எப்பணி கொடுத்தாலும் அப்பணிகளை முழு மூச்சுடன் செயல்படும் செயல் வீரர் மு.ஜெயக்குமார் அவர்களுக்கு கழக நிர்வாகிகள், திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணியினர் மலர் மாலை அணிவித்து கேக் வெட்டி, திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு ஜெயக்குமார் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்கள்



# வாசுதேவநல்லூர் அருள்மிகு மாரியம்மன் கோவில் பூக்குழி திருவிழா

வாசுதேவநல்லூர், ஏப்.30-

வாசுதேவநல்லூர் அருள்மிகு மாரியம்மன் கோவில் பூக்குழி திருவிழாவில், மாவட்டத்திலேயே அதிக அளவில் பக்தர்கள் தீ மிதித்து தங்களது கடமையினை நிறைவேற்றுவது வழக்கம். கடந்த 25 ஆண்டுகளாக கோயிலில் பூக்குழி விழா நடைபெறாமல் இருந்த நிலையில், கடந்த ஆண்டு திருக்கோயில் திருவிழா தொடர்பாக தூத்துக்குடி இணை ஆணையர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு எண் 0/29/2021 முடிவுற்று தீர்ப்பானது. திருக்கோயில் நிர்வாகம் சார்பாக திருவிழா நடத்திட உத்தரவு வரப்பெற்று கடந்த வருடம் போல் இந்த வருடமும் மேற்படி உத்திரவினை நிறைவேற்றும் பொருட்டு, திருக்கோயில் நிர்வாகம் சார்பாக திருவிழா நடைபெற்றது. தென்காசி எம்பி ஸ்ரீ ராணி குமார் சங்கரன்கோவில் எம்எல்ஏ தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராசா பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி உருப்பட அனைத்து சமுதாய அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் தென்காசி ஏடிஎஸ்பி மதியழகன் புளியங்குடி டிஎஸ்பி மதன் 250க்கும் மேற்பட்ட காவல்துறையினர் கலந்து கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்தார்கள்.

# குத்தம்பாக்கம் பேருந்து முனையம் ஜூன் மாதம் திறப்பு: போக்குவரத்து துறை அதிகாரிகள் தகவல்


சென்னை, ஏப்.30-

குத்தம்பாக்கம் பேருந்து முனையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தில் ஏற்படும் நெரிசலுக்கு தீர்வாக, கிளாம்பாக்கம் பேருந்து முனையம் கட்டப்பட்டு தற்போது இயங்கி வருகின்றது.தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் 90 சதவீத அரசுப் பேருந்துகள் தற்போது கிளாம்பாக்கத்தில் இருந்து இயக்கப்படும் நிலையில், ஈசிஆர் வழியாக செல்லும் பேருந்துகள், வேலூர், தருமபுரி போன்ற வட மாவட்டங்கள் மற்றும் பெங்களூருவுக்கு இயக்கப்படும் பேருந்துகள் கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது.



இந்நிலையில், கோயம்பேடு மற்றும் பூந்தமல்லி பகுதிகளில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதமாக திருமழிசை அடுத்த குத்தம்பாக்கத்தில் சுமார் ரூ.400 கோடி மதிப்பீட்டில் பேருந்து முனையம் அமைக்கப்பட்டுள்ளது.24.8 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த நவீன பேருந்து முனையத்தின் கட்டுமான பணிகள் முடிந்துள்ள நிலையில், மின்சார இணைப்பு மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.இந்த பேருந்து முனையம் வரும் ஜூன் மாதம் திறக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து, போக்குவரத்து துறை அதிகாரிகள் மேலும் கூறியதாவது: இந்த முனையத்தில் இருந்து அரசு விரைவுப் பேருந்துகள், விழுப்புரம் மற்றும் சேலம் கோட்டப் பேருந்துகள், கர்நாடக அரசுப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

வேலூர், ஓசூர், பெங்களூரு, திருப்பதி மற்றும் திருவனந்தபுரம் போன்ற முக்கிய நகரங்களுக்குச் செல்லும் பயணிகள் இந்த முனையத்தின் மூலம் பெரிதும் பயனடைவார்கள்.தேசிய நெடுஞ்சாலை உடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ள இந்த முனையம், அண்டை மாநிலங்களுக்குச் செல்லும் பேருந்துகள் நகருக்குள் நுழையாமல் விரைவாகச் செல்ல வழிவகை செய்கிறது.மேலும், பூந்தமல்லி பைபாஸ் மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் இந்த பேருந்து முனையம் உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



# கோடை வெப்பத்தை தணித்து டெல்லியை குளிர்வித்த திடீர் மழை

புதுடெல்லி, ஏப்.30-

தலைநகர் டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இன்று காலை மழை பொழிவு பதிவானது. இதன் மூலம் கடந்த சில நாட்களாக அங்குள்ள மக்களை வாட்டி வந்த கோடை வெப்பம் சற்று தணிந்துள்ளது.

மழையுடன் காற்றும் மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் வீசியதால் வெப்பநிலை அங்கு சரிந்துள்ளது. இன்று காலை டெல்லியின் பல்வேறு பகுதிகளில் மழைப் பொழிவு லேசானதாக ஆரம்பமானது. அதைத்தொடர்ந்து திடீரென வானிலை நிலவரம் மாறியது. வானில் கருமேகங்கள் சூழ மழை பொழிவு தொடர்ந்தது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை அன்று 39.2 டிகிரி செல்சியஸ் வெப்பம் டெல்லியில் பதிவானது. கடந்த திங்கட்கிழமை அன்று 42.3 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவானது. டெல்லியில் வெப்ப அலை வீச வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் மஞ்சள் அலர்ட் கொடுத்திருந்தது. இந்தச் சூழலில் மேற்கு சுழற்சியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இன்று அங்கு மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த மழை காரணமாக டெல்லியில் வெப்பநிலை மாறியுள்ளது. இதனால் அங்கு இன்று 27 முதல் அதிகபட்சம் 38 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் நிலவும் என தகவல். மழைப் பொழிவு தொடரவும் வாய்ப்புள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. மழை காரணமாக டெல்லியில் காற்றின் தரமும் சற்று மேம்பட்டுள்ளது.

மத்திய பாகிஸ்தான் மற்றும் ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியாணா உள்ளிட்ட வடமேற்கு பகுதிகளில் நிலவும் சூறாவளி சுழற்சி வடகிழக்கு இந்திய பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள வானிலை மாற்றம் தான் இது என தனியார் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000